**செய்தி வெளியீடு எண்: 485** **நாள் : 24.09.2014**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 23.9.2014 அன்று தலைமைச் செயலகத்தில், நாகப்பட்டினம் மாவட்டம், மணல்மேட்டில் அமைந்துள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வகுப்புகள் துவக்கப்படுவதை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள். மேலும், 26 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கல்லூரி கட்டடங்களைத் திறந்து வைத்து, 63 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பல்வேறு கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, ஒரு கோடியே 19 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான தொழில்நுட்பக் கல்வி தொடர்பான திறன்மேம்பாட்டு வசதிகளைத் துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள ஏழை, எளிய மற்றும் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மாணவ மாணவிகள் உயர்கல்வி கற்று அதன்மூலம் வேலை வாய்ப்பினைப் பெற்று வாழ்வில் சிறப்பான நிலையை அடையவேண்டும் என்ற நோக்கில், கடந்த மூன்று ஆண்டுகளில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் 4 அரசு பொறியியல் கல்லூரிகள், 11 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 37 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் என மொத்தம் 52 கல்லூரிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள். இந்தக் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

மயிலாடுதுறை மற்றும் சீர்காழி சட்டமன்ற தொகுதி மக்களின் கோரிக்கைக்கிணங்க, மயிலாடுதுறையில் 'மணல்மேடு' என்னுமிடத்தில் புதியதாக இரு பாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நடப்பாண்டு முதல் துவங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.8.2014 அன்று சட்டப்பேரவையில் அறிவித்திருந்தார்கள். அதன்படி, நாகப்பட்டினம் மாவட்டம், மணல்மேட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வகுப்புகள் துவக்கப்படுவதை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இதன் தொடர்ச்சியாக, தர்மபுரி மாவட்டம், தித்தியோப்பனஹள்ளியில் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடம் மற்றும் பெரியார் பல்கலைக்கழகத்தில் 1 கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பெரியார் மேலாண்மை கல்வி நிலையம், கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் 5 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கல்வியியல், நிர்வாகம் மற்றும் மாணவியர் விடுதி கட்டடங்கள், திருச்சிராப்பள்ளியில் அண்ணா பல்கலைக்கழக பாரதிதாசன் தொழில்நுட்பப் பயிலக வளாகத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைகள், கோயம்புத்தூர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் 1 கோடியே 57 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகளிர் விடுதி, கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பொது கணினி மையம் மற்றும் 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மழை நீர் சேகரிப்புக்கான தடுப்பணை, தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு அரசு கல்வியியல் கல்லூரியில் ஒரு கோடியே 17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகளிர் விடுதி, கும்பகோணம் அரசு கலைக் கல்லூரியில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதி, கோயம்புத்தூர் அரசு கலைக் கல்லூரியில் 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகளிர் விடுதி, கடலூர் பெரியார் அரசு கலைக் கல்லூரியில் 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகளிர் விடுதி;

என 26 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கல்லூரி வகுப்பறை மற்றும் விடுதிக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் ஒரு கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 10 வகுப்பறைகள் மற்றும் கருத்தரங்கு கூடம், தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் 7 கோடியே 25 லட்சம் மதிப்பீட்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நிர்வாக மற்றும் கல்வியியல் கட்டடம், புதுக்கோட்டையில் மாட்சிமைதங்கிய மன்னர் அரசு கலைக் கல்லூரியில் 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 8 வகுப்பறைகள், தர்மபுரி மாவட்டம், அரூரில் 7 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக் கட்டடம், மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் 7 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மதுரை காமராசர் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக் கட்டடம், கன்னியாகுமரியில் 7 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக் கட்டடம், புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியில் பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 7 கோடியே 97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடம், விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணைநல்லூரில் 7 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவள்ளுவர் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக் கட்டடம், காஞ்சிபுரம் மாவட்டம், நெம்மேலியில் 7 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னை பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக் கட்டடம், திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரில் 7 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மதுரை காமராசர் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக் கட்டடம், கோயம்புத்தூர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான புவி தொழில்நுட்ப தொகுப்புக் கட்டடம், திருச்சிராப்பள்ளி அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் தேசிய திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மாணவர் விடுதி;

என 63 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பல்வேறு கல்லூரி கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

மேலும், 20 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 10 பொறியியல் கல்லூரிகளில் 30 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள காணொலிக் காட்சி ஒளிபரப்பு மையங்களையும், 10 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 6 அரசு பொறியியல் கல்லூரிகளில் 80 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள 'இ–யந்த்ரா' ரோபாடிக்ஸ் ஆய்வகங்களையும், 350 பொறியியல் கல்லூரிகளில் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் பிரிட்டிஷ் கவுன்சில் தயாரித்த உயிரோட்ட இயக்கப் படங்களைக் கொண்ட வேலை தேடுவோருக்கான தொகுப்பு பயன்பாடுத் திட்டத்தினையும், 140 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 6 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில்

உள்ளூர் சூழலுக்கேற்ப இருமொழி பாடப்புத்தகங்கள் மற்றும் ஒளி–ஒலி குறுந்தகடுகள் பயன்பாடுத் திட்டம்;

என ஒரு கோடியே 19 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

மொத்தத்தில் உயர்கல்வித் துறையின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் அடிக்கல் நாட்டி, திறந்தும், துவக்கியும் வைக்கப்பட்ட பணிகளின் மதிப்பீடு 91 கோடியே 40 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் ஆகும்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு பி. பழனியப்பன், தலைமைச் செயலாளர் திரு மோகன் வர்கீஸ் சுங்கத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப (ஓய்வு), உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு ஹேமந்த் குமார் சின்ஹா, இ.ஆ.ப., தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திரு குமார் ஜெயந்த், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள்: 24.9.2014